உ

கடவுள் துணை.

---

வினோத

# ஸ்காந்தஜாலம்.

## நான்காம்பாகம்.

இவை ௫-பாகம் வரையில் அச்சிட
ப்பட்டு ஒரே கட்டடமாகவும் பை
ண்டு செய்திருக்கிறது.



இவை-சிறுமணவூர்

முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

---

திருப்பதி

இரத்தினமுதலியாரவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள் துணை

# ஸ்காந்தஜாலம்.

காப்பு - விருத்தம்,

ஆதியாம் சத்திசிவ மிரண்டுங்காப்பு
அருவுருவாகிநின்ற பிர்மங்காப்பு
சோதியாமுதற்கடவுள் அடியேகாப்பு
சொல்லரியசித்தரடிக்கமலங்காப்பு
நீதியாய்கலைவாணி நிதமுங்காப்பு
நிஜரூபமாயுரைத்த குருவேகாப்பு
பேதியாதேயுலகில் யெவருங்காணப்
பேசிகிறேன் ஸ்காந்தமென்னும் ஜாலந்தானே.



வாய்வுஸ்தம்பனஜாலம்.

காந்தமென்றால் ஏழூசிபிடிக்குக்காந்தம்
கண்மணியே பலமெட்டாய்கொண்டுவந்து
போந்தவேவுள்வீட்டு வலச்சல்தன்னில்
பொசித்திடுவாய் திசைநாலும்பலமிரண்டு
சாந்தமாய்நீயிருந்து தபசுசெய்ய
சட்டமாயிரும்பாலேபல்கைசெய்து
கூர்ந்தமனவென்சீடா சூட்சங்கேளு
சூரிப்பாகமையத்தில் போட்டுருந்தே

ருந்தவேயென்சொல்வேன் காந்தவித்தை
குலுங்காமல் கிளம்புமடா பலகையோடே
அந்தாமாய்நீயிருந்து செய்யும்வித்தை
அரகராரிஷியைப்போல் யோகம்மூட்டு
வந்திருக்கும்சபையோர்கள் எண்ணமிட்டு
வாய்வுஸ்தம்பனமென்றே மயங்குவார்கள்
சந்ததமென்மனமறிந்த ஆசான்வாக்கு
சந்தேகமில்லையடா செய்துபாரே.

வ-ம் ஏழுசிபிடிக்கும் காந்தமாக எட்டுபலங்கொண்டுவந்துகொஞ்சம் மறைவாகயிருக்கும்படியானவீட்டுக்குள்வலச்சல்மேல்மையம்பார்த்துஒருகெஜநிகளசவுக்கமாகநாலுமூலையிலும் உ-பலங் காந்தபெடுத்து நிற்கும்படியான வலுவாகப்பொருந்தவைத்து அதற்கு நேர்கீழாக யிரும்புபலகை சன்னமாகவும் ஒருஆள்குந்தத் தக்கினதாகவும் போட்டு விட்டுவிடாமல் உடனேகுந்திக்கொள்ளவும் ஆனால் குந்துகிறவன் விபூதிருத்திராட்சம் காசாயம்பூண்டு யோகியைப்போல்இருக்கவேணும் குந்தினவுடன் வாயைகெட்டியாகமூடிக்கொண்டு தம்பிடிக்கிறவனைப்போல் பூடகமாயிருந்தால்தான் பார்க்கிறவர்கள் வாய்வுஸ்தம்பனம் செய்கிறானென்பார்கள் மிகவும் மகிமையாக யெண்ணுவார்கள் ஆனால்காந்தம்யாருக்கும்தெரியாமே வைத்திருக்கவேணும்.

மாக்கிளியை பறக்கவிடும்ஜாலம்.

செய்யடாமரத்தாலே கிளிதானொன்று
சில்ப்பியவன்லட்சணமாய் செய்யவேணும்
வையடாரெக்கையது தகட்டினாலே
வைப்பதுதான்கிலிருந்து ஆடவேணும்
பையடாகாந்தமது யிருக்கும்வீட்டில்
பாலகனேகிளியதனை யேந்திநில்லு
பொய்யடாயில்லையந்திரமாய்நிற்கும்
பொட்டெனவேமறுபடியும்பிடித்துக்கொள்ளே.

பிடித்தவுடன்ரெக்கைதனை மடித்துப்போடு
பாருங்கள்யென்றுகையில் யேந்திநில்லு
விடுத்தவுடன்ரெக்கையது விரித்துக்கொள்ளும்
விள்ளுமுன்னேயந்திரமாய் மேலேபோகும்
அடுத்திருக்கும்சபையோர்கள் பார்த்துபார்த்து
ஆதிமுதல்மந்திரத்தில் தேர்ந்தோனென்பார்

கடுத்தமனவஞ்சருக்குச் சொல்லவேண்டாம்
கண்மணியேயின்னாலே பதனம்பண்ணே

(வ-ம்) மரத்தினாலேகிளிபோல்செய்து வர்ணம்முதலானதும்உன்னிதமாகப்பூசி ரெக்கைமாத்திரம் மெல்லிசியான யிரும்புத்தகட்டினாலே கத்திரித்து அதற்கு கீலுகள்வைத்து ரெக்கை ஆடும்படியான தந்திரத்தோடு தொடுக்கவும் ஒவ்வொருபக்கமும் பாதிரெக்கைக்குமாத்திரம் பலவித வர்ணம்பூசியிருக்கவும் நடிக்கும்போது காந்தமிருக்கிறவீட்டில்சென்று இந்தமரத்தினால் செய்தகிளி அந்திரமாய் பறக்குமா வென்றுசொல்லி ஆகிலும் ஒருமந்திரம் போடுகிறேன் பாருங்கள் யென்றுசொல்லி விபூதியெடுத்து மேலும் கீழுமாக முழித்து முழித்துபார்த்து (சல்-மலையாளபகவதி) ஓடிவா சபையிலேவந்துசற்றுநேரம் நில்லுயென்று விபூதியை நாலுதிக்கும்போட்டு இந்த கிளியை உள்ளங்கையிலேவைத்து யேந்தினால் மேலுக்குக்கிளம்பும் கைக்குஎட்டினவரையில் போகும்போது மறுபடியும்பிடித்து ரெக்கையைமடித்துமுன்போல் யேந்தவும் மறுபடியும் அப்படியேகிளம்பும் பார்ப்பவர்களெல்லாம் மந்திரஞ்செய்தானென்று மயங்கித் தியங்குவார்கள், 50



அந்தரவிநாயகனைக்காட்டுஞ்ஜாலம்,

பண்ணப்பாமரத்தாலேகணேசன்போலே
பக்குவமாய்அவயவங்கள் நன்றாய்ச்செய்து
கண்ணப்பாநகையாலும் புஷ்பத்தாலும்
கணேசனைத்தானன்றாக அலங்கரித்து
விண்ணப்பாகாந்தத்தின் நேர்கீழாக
வைத்துவிடுயிரும்பொன்று பலகைபோட்டு

ண்ணப்பாகுடமதைகொளித்திக்கொண்டு
நினைவாகமணியாட்டி தூபங்காட்டு

தூபமதுகாட்டுதற்குமுன்னேயீசன்
துலக்குவார் அந்திரமாய் பலகையோடே
சாபமிதற்கில்லையடா சூட்சவித்தை
சண்முகற்குச்சிடனடா வெந்தனுசான்
கோபமுதல்பொய்களவுயில்லாதாலே
கொடுத்தமொழிஉலகரியவெளியாய்போட்டேன்
தாபரம்போல்செனங்களெல்லாமயங்கித்தேதங்கி
தலையாலேஉன்னடியை வணங்குவாரே.

வ-ம் மரத்தினாலே விநாயகரைப்போல்செய்து அவயவங்கள் பின்னப்படாமல் பக்குவமாய்செய்து வர்ணம்முதலான துப்பூசி புஷ்பத்தினாலே சாத்துபடிசெய்து நகைகள்முதலான தும்கொண்டு அலங்கரித்து காந்தமிருக்கும்வீட்டில்சென்று மேலே யிருக்கும் காந்தத்துக்குநேர்கீழாக இரும்புப்பலகைபோட்டு உடனேகணேசனை வைத்துசபையோர்க்குகாட்டிவிட்டு குடம்கொளுத்திவலதுகையிலும் மணியெடுத்து யிடதுகையிலும்பிடித்துநின்று விநாயகர் அகவலைப்படிக்கவும் கணேசர் அந்திரமாய்க்கிளம்புவார் பார்ப்பவர்கள்ஆச்சரியப்படுவார்கள் மிகவு முன்னிதமான வேடிக்கையாயிருக்கும், 51

குடத்துமேல்தேங்காயுடைக்குஞ்ஜாலம்

வணங்கவேகுப்பையுடமேனிமூலி
வளமானஆதியென்றவாரந்தன்னில்
யிணங்கவேகன்னிநூல் காப்புக்கட்டி
யெடுத்துவாஉன்னுடைய பட்சிபார்த்து
அணங்கவேவேரதனைக்கீழேவைத்து
அப்பனேபுதுக்குடத்தை மேலேமூடி
ஜெனங்களேபாரென்று தேங்காய்மோது
சிதறியேபோகுமடா தூளாய்த்தானே

வ-ம் குப்பைமேனிச்செடிக்கு ஆதிவாரம்பார்த்து மஞ்சள் நூலினால்காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து வேரறாமல் பிடுங்கிவந்து புதக்குடத்துக்குள்ளேவைத்து கவிழ்த்துவிட்டு தேங்காயைமோதி நேராக அடித்தால் சூறைவிட்டதுபோல் சிதறிப்போகும் ஆனால் தன்பேருக்குஉள்ளபட்சி அரசாயிருக்கும்போது காப்பு கட்டவேணும் இது 52
கைகண்டது;

## ஆடுமேயாதஜாலம்,

தாமெனன்றமூஞ்சூரை பிடித்துமைந்தா
 தண்ணியதுவோடையிலே விட்டுப்பாரு
ஏமெனன்றுஎதிர்நோக்கிஓடுமப்பா
 இருதுண்டாய்க்கத்தியினல் போடுபோடு
ஆமெனன்றதலைப்புரத்தையெடுத்துவந்து
 ஆடிருக்கும்யிடந்தேடி புதைத்துப்போடு
நாமெனன்றேதழைமேயப் போகாதப்பா
 ஞாட்டிலேயரிட்சியிதை பார்த்தாருண்டு,

வ-ம் மூஞ்சூரைப்பிடித்துவந்துஓடுகிறதண்ணியில்விட்டால் எதிர்நோக்கியோடும் அப்போதுகத்தியினல்ஒரேவெட்டாகவெட்டி தலைப்புரத்தைமாத்திரம் யெடுத்துவந்து ஆடுயிருக்கும்யிடத்தில் புதைத்துவிட்டால் மறுபடியும்எழுந்து தழைமேயப்போகாது புதைத்ததை எடுத்தாலேபோகும். 53

## நினைத்தயிடத்தில்போக சுயசாலம்,

பாரப்பாஆலின்கிழ் ஆலன்கண்ணு
 பார்த்துனக்குஅகப்பட்டால் உளவுகேளு
தீரப்பாகதிரவன்றன்கிழமைதன்னில்
 தேவிநூல்தன்னாலே காப்புக்கட்டி
சேரப்பாஉடன்அடுத்தவெள்ளிநாளில்
 சூரியனர்உச்சியிலே பொங்கலிட்டு
காரப்பாகோழிபலி தூபதீபங்
 கண்மணியேயீகொடுத்துப் பிடிங்கிவாயே.

பிடிங்கினதைத்தீட்டில்லா விடத்தைத்தேடி
 பெற்றவனேபத்திரமாய்வைத்துக்கேளு
அடுத்துவரும்செவ்வாயில் தலையைமூழ்கி
 அநத்துடையவாசலெல்லாமெழுகிப்போடு
பிடித்துவைப்பாய்சாணத்தால்கணேசருன்று
 பில்லருதுவெல்லமுடன்தாம்பூலங்கள்
பெடுத்துவந்தவேறதனையெதிரில்வைத்து
 ஈஸனுக்குதூபதீபம்தேங்காய்தானே.

தேங்காயையுடைத்தல்லோதூபங்காட்டி
 தீட்டில்லாவிடத்துக்குவேரைத்தூக்கு
தேங்காதேவெகுநினைவாய் தினமும்பாரு
 தீபம்போல்நட்சத்ரம்வீழும்போது
வாங்கியேயதிவிரைவாய் வேரைப்போட்டு
 வலதென்றகாலதனல்மிதித்துக்கொண்டு

தேடிநாமல்வேரெடுத்து தூபங்காட்டி
செருப்பிலேதைத்துவழி நடந்துபாரே

(வ-ம்) ஆலமரத்தின்கிழ் ஆலங்கண்ணு அகப்பட்டால் ஆதிவாரம் காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து அடுத்தவெள்ளிக்கிழமையில்சிரி பருடுவையில்பொங்கலிட்டு பலிகொடுத்து தூபங்கொடுத்துவேராரம ல்பிடுக்கிவந்து தீட்டுப்படாமல் ஒருயிடத்தில்வைத்திருந்து அடுத்த செவ்வாய்க்கிழமையில்தலைமுழுகி வாசலெல்லாமெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து அருகம்பில்சூட்டி தாம்பூலம்வெல்லம் பழம் வைத் துயிந்தசெடியும்வேரும் எதிரில்வைத்து தூபதீபங்கொத்து தேங்கா யுடைத்து வேரையெடுத்து பத்திரமாகத்தீட்டுப்படாமல் வைத்திரு க்கவும் தினகாலம் ஸ்நானஞ்செய்து கியாபகமாகப்பார்த்து கொண் டேயிருந்து நக்ஷத்திரம்விழும்போது வேரையெடுத்துகிழேபோட்டு வலதுகாலால் மிதித்துக்கொள்ளவும் செருப்புக்குள்ளேவைத்துதை த்து திட்டில்லாதிடத் திருக்கவும் ஊர்ப்பிரயாணம் போகும்போது போட்டுநடந்தால் பதின்காதமானாலும் அலுப்பில்லாமல் நடக்கலாம் யெப்போதும்பத்திரமாய் காப்பாற்றவேணும் மந்திரமில்லைதந்திரந் தான்செய்துபார்த்தால் தெரியும். 54

விளக்குபார்க்கும் ஒருவிதசாலம்,

வீழாதென்றேசிலரால் சொல்லக்கேட்டு
விளம்பினேன்யின்னமொரு வித்தைகேளு
அழகானமயிலிறகு கொண்டுவந்து
அப்பனேகளஞ்சிரசம் உள்ளேவிட்டு
யிகழாமல்சீலைதனை மேலேசுத்தி
யெண்ணெயிலேதோய்த்ததனை கொளுத்திப்பாரு
புகழுதனைகுருவெனக்குச் சொல்லவில்லை
புதுமையிதில்வேறேது உண்டோகாணேன்.

(வ-ம்) மயிலிறகு நீட்டமாயுள்ளதை ஒன்றுகொண்டுவந்து அதின் கிழ்துவாரமாகஒருகளஞ்சிரசம்விட்டு களிமண்ணினால் மூடியிறகுதெ ரியாமல் சல்லாக்கந்தையால் முழுதிலுஞ்சுத்தி விளக்கெண்ணெயில் தோய்த்து ஒருபக்கமாககொளுத்திபார்க்கவும். 55

முட்டைவெடிக்கும் ஜாலம்.

உண்மையடாமுட்டையது வெடிக்கும்வித்தை
உத்தமனேயித்தரையில் பகரக்கேளு
வெண்மையடாதோளியுடஅண்டந்தன்னை
வெள்ளையென்ற சுக்கிலத்தை வாங்கிப்போட்டு

தண்மையாம் சமபாகம் தக்காளிச்சார்
தாக்கடா சுண்ணாம்பு கெந்தகந்தான்
கண்மணி யேயல சொல்வேன் நிமைநேரத்தில்
கடையருக்துவெடிபோலே காட்டுந்தானே

(வ-ம்.) ஒருகோழிமுட்டைக்குள் ளிருக்கும் வெள்ளை அம்புலியாவு மெடுத்துவிட்டு அதில்நிறைய தாளிக்காய் கற்சுண்ணாம்பு கெந்தகம்இவைகளைவெவ்வேறு சமமாயரைத்து ஒருமிக்கச்சேர்த்துமுட்டைக்குளிட்டுமெழுகால் அதின்சிறுவாயைமூடி குலமுதலியதண்ணீருள்ளயிடத்திற்போட்டுவைக்க அதில் வெடிசப்தங்கிளம்பும்- 56

{ வாயில் அக்கினிஉண்டாகும் ஜாலம்.
கொரண்டிச்சிந்து }

வாயிலக்கினிபறக்கும்-வித்தை
வரைகிறேன்கேளிதோ புவிமீதே
தம்பலமேனும்பூச்சி-ரவிமுகம்
தாக்கியேகாயவைத்து சமபாகம்
வெள்ளைக்கல்தனைப்பொடித்து-யிரண்டும்
வோரிடைபாகமீ கலந்துக்கொண்டு
தாடையில்திருகடித்தூள்-தனியே
தந்திரமாயடக்கி சபையில்வந்து
வேடிக்கைபாருமென்று-மெதுவாய்
ஊதிடஅக்கினிதான் மேவிடுமே (தந்தின) 57

வழக்குவெல்லும்வித்தை.

மேவிடும்வழக்குவெல்ல-உபயோகம்
விளம்புகிறேன்சீர்நலம்பெறவே
நாவிடும்நெரிஞ்சியின்வேர்-அதற்கு
நேரிடைமயில்ரோசனையாகும்
இரண்டையும்சேகரித்து வாசலில்
யிரித்திகணேசனைபூசைசெய்து
நிறைந்துளகுலதெய்வம்-அதையும்
நினைத்துடனெடுத்ததைவாயிலடக்கி
வழக்குளமுகம்நோக்கு-யெதிரி
வதருவான்பிதருவான்-சிதரிடுவான்
கிழக்குமேற்காயுரைப்பான் அவன்மொழி
கிழிந்திடும்உன்மொழிவழியாகும் (தந்தினதனதன) 58

நான்காம்பாகம் - முற்றிற்று:

இனி ஐந்தாம்பாகம்.